செய்தி வெளியீடு எண்-553 நாள்-26.8.2007

**தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும்**
**ஓணம் திருநாள் வாழ்த்துச் செய்தி**
**26.8.2007**

**கேரள மாநில மக்களால் அறுவடைத் திருநாளாகப் பெரிய அளவில் கொண்டாடப்படும் "ஓணம் திருநாள்" இன்று (27.8.2007) கேரள மாநிலத்தில் மட்டுமல்லாமல் தமிழகம் உட்பட அம்மாநில மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.**

**ஆணவம், அகம்பாவம் ஆகிய கொடிய குணங்கள் மனித சமுதாயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும், அன்பு, அமைதி, சகோதர நேயம் ஆகியவை மண்ணில் வளர்க்கப்பட வேண்டும் என்றும் இத்திருநாள் வலியுறுத்துகிறது. தமிழகத்தில் வாழும் மலையாள மொழி மக்கள் தங்கள் குடும்பத்தினர், உறவினர் சூழ ஓணம் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்பதற்காக அவர்கள் நிறைந்து வாழும் எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, கோவை, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் கடந்த ஆண்டில் சிறப்பு விடுமுறை அளித்த இந்த அரசு, இவ்வாண்டு முதல் சென்னை மாவட்டத்திற்கும் விடுமுறை வழங்கியுள்ளது.**

**தமிழக மக்களின் உரிமைகளை மட்டுமல்லாமல் தமிழகத்தில் வாழும் அண்டை மாநில மக்களின் நியாயமான உணர்வுகளையும் மதிப்பது இந்த அரசு என்பதற்கு இது ஒரு சான்றாகும் என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், இன்று ஓணம் திருநாளைக் கொண்டாடும் மலையாள மொழி உடன்பிறப்புகள் அனைவர் வாழ்விலும் அன்பு தழைத்திட, அமைதியும் வளமும் செழித்திட, இன்பம் பெருகிட எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.**

*****

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.